# P.L.RAJ IAS & IPS ACADEMY

**Building Bureaucrats Since 2006**

## July 3, 2026 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. ஜப்பான் ஒத்துழைப்புடன் இந்தியாவில் 1,000 உயிரி எரிவாயு மற்றும் இயற்கை உரங்கள் உற்பத்தி ஆலைகள் அமைக்க முடிவெடுக்கப்பட்டுள்ளது.

i. இதேபோல், அதிநவீன ராணுவ தளவாடங்களைக் கூட்டாகத் தயாரிக்க இரு நாடுகளும் முதல்முறையாக ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டன.

ii. தில்லியில் பிரதமர் நரேந்திர மோடி, ஜப்பான் பிரதமர் சனே தகாய்ச்சி இடையே நடைபெற்ற 16-ஆம் ஆண்டு உயர்நிலைப் பேச்சுவார்த்தையில் இந்த முக்கிய முடிவுகள் மேற்கொள்ளப்பட்டன.

iii. ஜப்பான் பிரதமர் சனே தகாய்ச்சி மூன்று நாள்கள் அரசுமுறைப் பயணமாக இந்தியாவுக்கு வந்தார். தில்லியில் நடைபெற்ற இரு நாடுகளின் வருடாந்திர உயர்நிலைப் பேச்சுவார்த்தையில் அவர்கள் பங்கேற்றனர். வர்த்தகம், முதலீடு, பொருளதார பாதுகாப்பு, எரிசக்தி, வளரும் தொழில்நுட்பங்கள், பாதுகாப்பு, மக்கள் ரீதியிலான தொடர்புகள் உள்பட பல்வேறு துறைகளில் இரு தரப்பு நல்லுறவை மேம்படுத்துவது தொடர்பாக இருவரும் விரிவாக ஆலோசித்தனர்.

iv. இந்திய-பசிபிக் பிராந்தியத்தில் சீனாவின் ஆதிக்கம் அதிகரிக்கும் சூழலில், பிராந்திய நிலவரம் குறித்தும், சர்வதேச விவகாரங்கள் குறித்தும் விவாதிக்கப்பட்டது.

v. முக்கிய ஒப்பந்தங்கள் கையொப்பம்:

- இந்தப் பேச்சுவார்த்தைக்குப் பின் பொருளாதார பாதுகாப்பு, தூய எரிசக்தி, முக்கியத் தொழில்நுட்பங்கள், மருந்து, மருத்துவ உபகரணங்கள் தயாரிப்பு, உயிரி தொழில்நுட்பம் உள்ளிட்ட துறைகளில் ஒத்துழைப்பை விரிவுபடுத்தும் முக்கிய ஒப்பந்தங்கள், இரு பிரதமர்கள் முன்னிலையில் கையொப்பமிடப்பட்டன.

vi. பொருளாதார-எரிசக்தி பாதுகாப்பு:

- பொருளாதார பாதுகாப்புக்கு இரு நாடுகளும் கூட்டுச் செயல்திட்டத்தை வகுத்துள்ளன. இதன்மூலம் செமிகண்டக்டர், குவாண்டம், அதிநவீன தொழில்நுட்பப் பொருள்கள் போன்ற உத்திசார் துறைகளில் மீள்திறன் மிக்க விநியோகச் சங்கிலி வலுப்படுத்தப்படும்.
- எரிசக்தி பாதுகாப்பைப் பொருத்தவரை, இந்தியா-ஜப்பான் உயிரி எரிவாயு முன்னெடுப்பின்கீழ், இந்தியாவில் 1,000 உயிரி எரிவாயு மற்றும் இயற்கை உரங்கள் உற்பத்தி ஆலைகள் அமைக்கப்படும். இது, இந்திய கிராமங்களில் நிலைத்தன்மை, வளம், ஊரக வாழ்வாதாரங்களுக்கு மேலும் வலுசேர்க்கும்.

- கச்சா எண்ணெய் நெருக்கடி போன்ற சூழ்நிலைகளை எதிர் கொள்ளும் வகையில், எரிபொருள் மீள்திறனுக்கான குறிப்பிடத்தக்க முன்னெடுப்பை உறுதி செய்துள்ளோம். அதன்படி, பேட்டரிகள், பசுமை ஹைட்ரஜன், தூய எரிசக்தி துறையில் ஒத்துழைப்பு விரிவாக்கப்படும்.
- பாதுகாப்புத் துறையில் இந்தியா மற்றும் ஜப்பான் இடையே முதல் முறையாக கூட்டுத் தயாரிப்பு ஒப்பந்தம் கையொப்பமிடப்பட்டுள்ளது. கடற்படை ரேடியோ ஆன்டெனா தயாரிப்புக்கான இந்த ஒப்பந்தம், பிராந்திய அமைதி-கடல் சார் பாதுகாப்பை வலுப்படுத்தும் என்றார் பிரதமர் மோடி.

vii. இருதரப்பு உறவுகளின் 75- ஆம் ஆண்டு:

- இந்தியா-ஜப்பான் இடையே ராஜீய உறவுகள் நிறுவப்பட்டு, அடுத்த ஆண்டுடன் 75 ஆண்டுகள் நிறைவடையவுள்ளன. இதையொட்டி, பல்வேறு கொண்டாட்ட நிகழ்ச்சிகளுக்கு இரு நாடுகளும் ஒப்புக்கொண்டுள்ளதாக வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் ரண்தீர் ஜெய்ஸ் வால் தெரிவித்தார்.
- இந்தியா-ஜப்பான் உறவுகள் கடந்த 2014-இல் சிறப்பு உத்திசார்- உலகளாவிய கூட்டுறவு அந்தஸ்துக்கு உயர்த்தப்பட்டது. இரு நாடுகளுக்கும் இடையே 70-க்கும் மேற்பட்ட கலந்துரையாடல் வழிமுறைகள் செயல்பாட்டில் உள்ளன.

viii. இந்தியா- ஜப்பான் இடையே கடந்த 10 ஆண்டுகளில் 100-க்கும் மேற்பட்ட புதிய வர்த்தக ஒப்பந்தங்கள் கையொப்பமிடப்பட்டுள்ளன. இதன்மூலம் இந்தியாவுக்கு 10 பில்லியன் டாலருக்கு மேல் (ரூ.95,462 கோடி) முதலீடுகள் கிடைக்கப் பெறுகின்றன.

- அடுத்த 10 ஆண்டுகளில் ஜப்பானில் இருந்து 10 டிரில்லியன் யென் (ரூ.5.90 லட்சம் கோடி) முதலீடுகளை ஈர்ப்பதுடன், இந்தியாவில் செயல்படும் அந்நாட்டு நிறுவனங்களின் எண்ணிக்கையை இரட்டிப் பாக்குவதே இலக்கு.
- ஜப்பானின் துல்லிய தொழில்நுட்பமும், இந்தியாவின் மென்பொருள் திறன்களும் ஒன்றிணைவது, செயற்கை நுண்ணறிவுத் துறைக்கு புதிய உத்வேகமும், வலிமையும் அளிக்கும்' என்றார் பிரதமர் மோடி.

2. ஐரோப்பிய நாடுகளில் நிலவிவரும் கடும் வெப்ப அலை மற்றும் வறட்சி காரணமாக, தெற்கு பிரான்ஸில் உள்ள வனப்பகுதிகளில் காட்டுத் தீ மிக வேகமாக பரவிவருகிறது.

i. பிரான்ஸில் கடந்த மே, ஜூன் மாத இறுதியில் பதிவான உச்ச வெப்பநிலையைத் தொடர்ந்து, அந்நாட்டில் மோசமான வறட்சி நிலவி வருகிறது. இதனால் செடி, கொடிகள் முற்றிலும் காய்ந்துவிட்டன. இதோடு பலத்த காற்றும் வீசி வருவதால், காட்டுத் தீ கட்டுக்கடங்காமல் பரவி வருகிறது.

ii. குறிப்பாக, ஸ்பெயின் எல்லைப் பகுதிகளில் இது வரை சுமார் 2,200 ஏக்கர் பரப்பளவிலான நிலங்கள் தீயில் கருகி சாம்பலாகியுள்ளன. தீயணைப்புப் பணி யில்

800-க்கும் மேற்பட்ட வீரர்கள் 150-க்கும் மேற்பட்ட தீயணைப்பு வாகனங்களுடன் ஈடுபட்டுள்ளனர். தீயணைப்பு விமானங்களும் இப்பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

iii. இதனிடையே, மார்சேயில், பிரேஜஸ் ஆகிய சுற்றுலாப் பகுதிகளிலும் காட்டுத் தீ பரவியதால், முன் னெச்சரிக்கை நடவடிக்கையாக அங்கிருந்த முகாம்களில் இருந்து 2,000-க்கும் மேற்பட்ட மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற்றப்பட்டனர்.

iv. பிரான்ஸில் நீடித்து வரும் இந்த கடும் வெப்ப அலையினால் இதுவரை சுமார் 1,000 பேர் வரை உயிரிழந்திருக்க வாய்ப்புள்ளது என்று அந்நாட்டின் சுகாதாரத் துறை மிகுந்த அச்சம் தெரிவித்துள்ளது.

3. மேற்காசியாவில் ஈரான்-அமெரிக்கா, இஸ்ரேல் இடையே ஏற்பட்ட போரால் இந்திய எண்ணெய் நிறுவனங்களுக்கு கடந்த ஜூன் 30-ஆம் தேதி நிலவரப்படி ரூ.74,781 கோடி இழப்பு ஏற்பட்டுள்ளது என்று மத்திய பெட்ரோலியம், இயற்கை எரிவாயுத் துறை அமைச்சர் ஹர்தீப் சிங் புரி தெரிவித்தார்.

i. இந்தப் போரால் வளைகுடா நாடுகளில் இருந்து கச்சா எண்ணெய், எரிவாயு எடுத்து வரும் முக்கிய கடல் வழித்தடமான மித்தடமான ஹோர்முஸ் நீரிணை மூடப்பட்டது. இதனால், சர்வதேச அளவில் பல நாடுகளில் பெட்ரோல், டீசல், எரிவாயு தட்டுப்பாடும், விலை உயர்வும் ஏற்பட்டது. எனினும், இந்தியாவில் சர்வதேச விலை நிலவரங்களுக்கு ஏற்ப எரிபொருள் விலையை பொதுத் துறை எண்ணெய் நிறுவனங்கள் அதிகம் உயர்த்தவில்லை. இந்நிலையில், தில்லியில் செய்தியாளர்களைச் சந்தித்த அமைச்சர் புரி மேலும் கூறியதாவது:

- போர்ப் பதற்றம் சற்று தணிந்து தற்போது சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலை குறைந்துள்ளது. எனினும், எண்ணெய் நிறுவனங்கள் மேற்காசிய நெருக்கடியின் அதிக விலைக்கு வாங்கப்பட்ட கச்சா எண்ணெயையே இப்போதும் சுத்திகரித்து வருவதால், விலை குறைவின் முழுப் பலன் உடனடியாக கிடைக்கவில்லை.
- மேற்காசியாவில் ஏற்பட்ட மோதல் அதற்கு முன்பே நிலவிய பதற்றம் காரணமாக கடந்த பிப்ரவரி மாதம் முதலே சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலை உயரத் தொடங்கியது. அதே நேரத்தில் இந்திய எண்ணெய் நிறுவனங்கள் உற்பத்திச் செலவைவிட குறைந்த விலையிலேயே எரிபொருளை தொடர்ந்து விற்பனை செய்து வந்தன.
- ஜூன் 30 நிலவரப்படி பெட்ரோல், டீசல், எல்பிஜி ஆகியவற்றை உற்பத்திச் செலவைவிட குறைந்த விலையில் விற்பனை செய்ததால், எண்ணெய் நிறுவனங்களுக்கு ரூ.74,781 கோடி இழப்பு ஏற்பட்டுள்ளது.

- எண்ணெய் நிறுவனங்கள் இப்போது விநியோகிக்கும் எரிபொருள், சுமார் இரண்டு மாதங்களுக்கு முன்பே கொள்முதல் செய்யப்பட்ட கச்சா எண்ணெய்யை சுத்திகரித்துப் பிரித்து எடுக்கப்பட்டதாகும். அதன்படி, ஏப்ரல்- மே மாத தொடக்கத்தில், சர்வதேச சந்தையில் விலை மிகவும் உயர்ந்திருந்த காலத்தில் வாங்கப்பட்ட எரிபொருள்தான் இப்போது விநியோகத்தில் உள்ளது என்றார்.

4. ஏடன் வளைகுடாவில் வெளிநாட்டுக் கொடி பொருத்திய ஒரு சரக்கு கப்பலில் கொள்ளை முயற்சியை இந்திய கடற்படையின் 'ஸ்டெல்த்' ரக போர்க்கப்பலான ஐஎன்எஸ் திரிகண்ட் முறியடித்தது. சரக்கு கப்பலில் இருந்த இந்திய மாலுமி உள்பட 21 மாலுமிகளின் பாதுகாப்பு உறுதி செய்யப்பட்டதாக கடற்படை அதிகாரிகள் தெரிவித்தனர்.

5. விபி ஜி ராம் ஜி எனப்படும் வளர்ந்த பாரதம் ஊரக வேலைவாய்ப்பு மற்றும் வாழ்வாதார உறுதியளிப்புத்திட்ட (125 நாள் வேலைத் திட்டம்) சட்டம், 2025-இன்கீழ் 3 விதித் தொகுப்புகளை மத்திய அரசு வெளியிட்டது.

i. மகாத்மா காந்தி ஊரக வேலைவாய்ப்பு உறுதியளிப்பு (100 நாள் வேலைத் திட்டம்) சட்டத்துக்கு மாற்றாகக் கொண்டுவரப்பட்டுள்ள விபி ஜி ராம் ஜி திட்டம் ஜூலை 1-ஆம் தேதி முதல் அமலுக்கு வந்தது. இது தொடர்பாக மத்திய ஊரக மேம்பாட்டு அமைச்சகம் சில அறிவிக்கைகளை வெளியிட்டது.

ii. முதல் அறிவிக்கையில், '100 நாள் வேலைத் திட்டத்தின்கீழ் ஜூன் 30-ஆம் தேதி வரையிலான நிலுவைத் தொகையை மாநில அரசுகள் கண்டறிந்து அதில் ஏற்கத்தக்கவற்றை செலுத்தியதற்கான சான்றிதழ்களை 180 நாள்களுக்குள் சமர்ப்பிக்க வேண்டும். உரிய காரணங்கள் சமர்ப்பிக்கப்பட்டால் இதை மேலும் 90 நாள்களுக்கு மத்திய அரசு நீடிக்கும். தற்போது 100 நாள் வேலைத் திட்டத்தில் மேற்கொள்ளப்படும் அனைத்துப் பணிகளும் 125 நாள் வேலைத் திட்டத்தின்கீழ் கொண்டுவரப்படும். புதிய வேலை உறுதியளிப்புத் திட்ட அட்டைகள் விநியோகிக்கப்படும் வரை பழைய அட்டைகள் செல்லுபடியாகும்' எனத் தெரிவிக்கப்பட்டது.

iii. இரண்டாவது அறிவிக்கையில், '125 நாள் வேலைத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் ஊதியம் அல்லது வேலையின்மை படிகளை சம்பந்தப்பட்ட நபரின் வங்கிக்கணக்கு அல்லது அஞ்சல் கணக்குக்கு நேரடியாக பரிமாற்றம் செய்ய வேண்டும். பணப் பரிவர்த்தனையில் ஈடுபடக் கூடாது' எனத் தெரிவிக்கப்பட்டது.

iv. மூன்றாவது அறிவிக்கையில், ‘சட்டப் பேரவைகள் இல்லாத யூனியன் பிரதேசங்களுக்கான முழு செலவுகளையும் மத்திய அரசு ஏற்றுக்கொள்ளும். மத்திய

அரசின் நிதிக்கு மேல் மாநில அரசு செய்யும் செலவுகள் மேலாண்மை தகவல் அமைப்பு (எம்ஐஎஸ்) மூலம் கண்காணிக்கப்படும்' எனத் தெரிவிக்கப்பட்டது.

v. 125 நாள் வேலைத் திட்டத்தை ஆந்திர மாநிலம் திருப்பதியில் மத்திய ஊரக மேம்பாட்டுத் துறை அமைச்சர் சிவராஜ் சிங் சௌஹான் மற்றும் ஆந்நிர முதல்வர் சந்திரபாபு நாயுடு ஆகியோர் தொடங்கிவைத்தனர்.

6. இந்தியாவில் மக்காச்சோளச் சாகுபடியின் வளர்ச்சி மற்றும் நெல், கோதுமை போன்ற அதிக நீர் தேவைப்படும் பயிர்களிலிருந்து மக்காச்சோளத்திற்கு மாறியுள்ள உத்திசார் மாற்றம்.

i. வரலாற்று ரீதியான பரிணாம வளர்ச்சி மற்றும் முக்கிய மைல்கற்கள்

- சர்வதேச அளவில் மக்காச்சோள உற்பத்திக்கு முந்தைய காலத்திலேயே வளர்ச்சி தொடங்கியிருந்த நிலையில், இந்தியாவில் அதன் உற்பத்தி மெதுவாகவே தொடங்கியது.
- 2007-08 ஆம் ஆண்டில் உற்பத்தியில் 22% அதிகரிப்பு ஏற்பட்டதும், அதைத் தொடர்ந்து அடுத்த ஆண்டில் 25% அதிகரிப்பு ஏற்பட்டதும் ஒரு முக்கியத் திருப்புமுனையாக அமைந்தன.
- கடந்த பத்தாண்டுகளில், இந்தியாவில் மிக வேகமாக வளரும் நீர்ப்பாசன வசதி கொண்ட பயிராக மக்காச்சோளம் உருவெடுத்துள்ளது; இதன் உற்பத்தி 2015-16 இல் 2.26 கோடி டன்களிலிருந்து 2025-26 இல் 5.5 கோடி டன்களாக உயர்ந்துள்ளது.
- கோதுமையை விட மூன்று மடங்கும், நெல் மற்றும் பருப்பு வகைகளை விட இரண்டு மடங்கும் அதிகமான வளர்ச்சி விகிதத்தை மக்காச்சோள உற்பத்தி எட்டியுள்ளது.
- நெல் மற்றும் கோதுமைக்கு வழக்கமாக வழங்கப்படும் பெரும் அரசு ஊக்கத்தொகைகள் இல்லாமலேயே மக்காச்சோளம் இந்த விரைவான வளர்ச்சியை எட்டியுள்ளது என்பது ஒரு குறிப்பிடத்தக்க வரலாற்று உண்மையாகும்.

ii. புவியியல் ரீதியான பரவல் மற்றும் மாநில வாரியான செயல்பாடு

- பல்வேறு புவியியல் சூழல்களுக்கு ஏற்ப தன்னை மாற்றிக்கொள்ளும் தனித்துவமான திறனைக் கொண்டிருப்பதால், இந்தியாவின் அனைத்து விவசாயப் பகுதிகளிலும் மக்காச்சோளம் வெற்றிகரமாகச் சாகுபடி செய்யப்படுகிறது.
- மேற்கு வங்கம், ஆந்திரப் பிரதேசம், பீகார், தெலுங்கானா மற்றும் தமிழ்நாடு ஆகிய ஐந்து மாநிலங்கள் மொத்த மக்காச்சோளச் சாகுபடி பரப்பளவில் 22% பங்கைக் கொண்டிருந்தாலும், மொத்த உற்பத்தியில் 38% என்ற குறிப்பிடத்தக்க

பங்களிப்பை வழங்குகின்றன.

- மாநில வாரியான விளைச்சல் புள்ளிவிவரங்கள்:
- ஹெக்டேருக்கு 7 டன் விளைச்சலுடன் மேற்கு வங்கம் முன்னிலையில் உள்ளது.
- 6.5 டன் விளைச்சலுடன் ஆந்திரப் பிரதேசம் அடுத்த இடத்தில் உள்ளது.
- பீகார் 6.1 டன் விளைச்சலைப் பதிவு செய்துள்ளது.
- தெலுங்கானா மற்றும் தமிழ்நாடு ஆகிய மாநிலங்கள் இதே போன்ற உயர் உற்பத்தி நிலைகளைத் தக்கவைத்துள்ளன.
- மத்தியப் பிரதேசம், மகாராஷ்டிரா மற்றும் கர்நாடகா ஆகிய மாநிலங்களில் மக்காச்சோளம் பெரிய அளவில் சாகுபடி செய்யப்பட்டாலும், அங்கு விளைச்சல் குறைவாகவே (ஹெக்டேருக்கு சுமார் 3 டன்) உள்ளது.
- மக்காச்சோளச் சாகுபடியில் 70% நீர்ப்பாசன வசதி இருந்தபோதிலும், முறையான முயற்சிகள் இல்லாததால் உத்தரப் பிரதேசத்தில் உற்பத்தி குறைவாகவே உள்ளது.

iii. அறிவியல் ரீதியான தகவமைப்புத் திறன் மற்றும் சாத்தியக்கூறுகள்

- காரீஃப் (Kharif), ரபி (Rabi) மற்றும் கோடைக்காலம் (Summer) ஆகிய மூன்று பருவங்களிலும் பயிரிடக்கூடிய மிகச் சில பயிர்களில் மக்காச்சோளமும் ஒன்றாகும்.
- நவீன, உயர்தர வீரிய ரக விதைகளின் (hybrid seeds) பயன்பாடுதான் சமீபத்திய விளைச்சல் அதிகரிப்புக்கு முக்கியக் காரணமாகக் கருதப்படுகிறது.
- தற்போது ஒரு ஹெக்டேருக்கு 4 டன்கள் என்ற அளவில் மகசூல் இருந்தாலும், மேம்பட்ட விதைகளைப் பயன்படுத்துவதன் மூலம் இதனை இருமடங்காக்கி, ஒரு ஹெக்டேருக்கு 8 டன்கள் என்ற சர்வதேச தரத்தை இந்தியா எட்ட முடியும் என்று இந்திய வேளாண் அறிவியல் மையம் கருதுகிறது.

iv. இந்த மாற்றத்திற்கான சுற்றுச்சூழல் சார்ந்த காரணங்கள்

- நிலத்தடி நீர்மட்டத்தைக் குறைப்பதாக அறியப்படும் நெல் மற்றும் கோதுமையுடன் ஒப்பிடுகையில், சோளப் பயிருக்கு மிகக் குறைந்த அளவே நீர் தேவைப்படுகிறது.
- மண்ணின் வளத்தைப் பாதித்து சுற்றுச்சூழலை மாசுபடுத்தக்கூடிய நெல் மற்றும் கோதுமை பயிர்களைப் போலன்றி, சோளம் ஒரு நிலையான மற்றும் சூழலுக்கு உகந்த மாற்றாக அமைகிறது.
- சோளச் சாகுபடிக்கு மாறுவது விவசாயிகளுக்கு நிலையான, தொடர்ச்சியான வேலைவாய்ப்பையும் போதுமான வருமானத்தையும் அளிக்கிறது; எனவே, இது அரசாங்கத்தின் ஒரு முக்கிய கொள்கை இலக்காக விளங்குகிறது.